# பொள்ளாச்சி நகராட்சி
## அவசரக் கூட்டம்

**29.12.2023 தேதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு பொள்ளாச்சி நகராட்சி நகர மன்ற கூட்டரங்கில் நடைபெற்ற அவசரக் கூட்டம் நடவடிக்கைகள்**

| வ. எண் | பொருள் விபரம் | தீர்மானம் |
|---|---|---|
| 1 | பொள்ளாச்சி நகராட்சியில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் பொள்ளாச்சி மரப்பேட்டை பகுதியில் உள்ள ஆதரவற்றோர்களுக்கான தங்கும் விடுதி பராமரிப்பு மற்றும் இயக்கப்பணிகளை மேற்கொள்ள M/s. ஹெல்பிங் ஹார்ட்ஸ் நிறுவனத்திற்கு 16.11.2021 முதல் 15.11.2022 வரை பணி உத்திரவு வழங்கப்பட்டு நகர்மன்ற தீர்மானம் எண்.440 நாள்.31.01.2023–ன்படி 15.11.2022 முதல் 14.11.2023 வரை நீட்டிப்பு செய்து பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. அந்நிறுவனத்திற்கு தற்போது வழங்கப்பட்டுள்ள பணி உத்திரவு 14.11.2023 அன்றுடன் முடிவடைவதால் M/s. ஹெல்பிங் ஹார்ட்ஸ் நிறுவனம் தொடர்ந்து ஆதரவற்றோர்களுக்கான தங்கும் விடுதியை பராமரிப்பதற்கான உத்திரவினை நீட்டிப்பு செய்து வழங்கிட கேட்டுள்ளதன் அடிப்படையில் 15.11.2023 முதல் 14.11.2024 வரையிலான ஓராண்டு காலத்திற்கு மட்டும் M/s. ஹெல்பிங் ஹார்ட்ஸ் நிறுவனம் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.1968/2021/எச்2** | **தீர்மானம் எண்.832 அனுமதிக்கப்பட்டது** |
| 2 | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் (ந.க.எண்:7145/2023/ எம் ஏ2, நாள்:15.12.2023) கடிதத்தில், அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற சாலைகள் மற்றும் பாலங்கள் பணி முன்னேற்றம் தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில், புறநகர் பகுதிகளில் உள்ள சாலைகளின் நிலை குறித்து விவாதிக்கப்பட்டு கிராம ஊராட்சிகளை அருகிலுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமென தெரிவிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள, அரசாணை(நிலை) எண்:142. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, நாள்:23.11.2023–ன் படி, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுடன் அருகிலுள்ள ஊராட்சிகளை இணைப்பது தொடர்பாக நகரமன்றத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, பொள்ளாச்சி நகராட்சிக்கு அருகிலுள்ள கீழ்காணும் ஊராட்சிகளை, நகராட்சியுடன் இணைத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மானம் எண்.833 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | 1. ஜமீன் முத்தூர் கிராம ஊராட்சி.<br>2. புளியம்பட்டி கிராம ஊராட்சி.<br>3. ஆச்சிப்பட்டி கிராம ஊராட்சி.<br>4. சின்னாம்பாளையம் கிராம ஊராட்சி.<br>5. மாக்கினாம்பட்டி கிராம ஊராட்சி.<br>6. ஊஞ்சவேலாம்பட்டி கிராம ஊராட்சி.<br>7. தாளக்கரை கிராம ஊராட்சி.<br>8. கிட்ட சூராம்பாளையம் கிராம ஊராட்சி.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>மேற்காண் கிராம ஊராட்சிகளை, நகராட்சியுடன் இணைத்திட மன்றம் அனுமதிக்கலாம். மேலும் அரசின் உத்திரவிற்கு உரிய வழிமுறையாக கருத்துருக்களை அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.3442/2017/ஜி3** | |

**(ஒப்பம்) திருமதி.ந.சியாமளா**
**நகர்மன்ற தலைவர்**
**பொள்ளாச்சி நகராட்சி**

**//உண்மை நகல்//**

**ஆணையாளர்**
**பொள்ளாச்சி நகராட்சி**